**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, AVINASHI.**

Judicial form No.53
(See Rule 42)

## DEPOSITION OF WITNESS

**CC.No. 312/2022**

PW-2

| | | | |
|---|---|---|---|
| Name | நவீன் குமார்(PW2) | | |
| Father's Name | சத்தியமூர்த்தி | தொழில் | |
| Village | சேவூர் | | |
| Taluk | அவிநாசி | Age | 25 |
| District | திருப்பூர் | | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 20th **day of August 2026** by Thiru. K. Kulanthaivel, Magistrate Clerk, JM Court, Avinashi by following the direction of Officer of this Court.

*(Accused Present)*

**முதல் விசாரணை:-**

நான் மேற்படி முகவரியில் குடியிருந்து கொண்டு டிரைவராக வேலை செய்த வருகிறேன். புகார்தாரர்செல்வராஜ் என் மாமா. செல்வராஜ் சதீஷ்குமார் இடம் 5000 ரூபாய் கடன் வாங்கி இருந்தார். அதில் நான்காயிரம் ரூபாயை திருப்பி கொடுத்து விட்டார். மீதி ஆயிரம் ரூபாய் கொடுக்க வேண்டி இருந்தது. ஆனால் அதை திருப்பிக் கொடுப்பதற்குள் எதிரிகள் இருவரும் எனக்கும் என் அண்ணன் பிரதீப் குமாருக்கும் போன் செய்து செல்வராஜை வெட்டாமல் விட மாட்டோம் என்று மிரட்டினார்கள். 03.08.2022 ம் தேதி இரவு 7 45- 8 மணி அளவில் அந்த ஆயிரம் ரூபாயை செல்வராஜ் சீனிவாச நகைக்கடை முன்பாக வைத்து சதீஷ்குமார் இடம் கொடுத்துள்ளார். பணத்தை கொடுத்து விட்டு சதீஷ்குமார் இடம் செல்வராஜ் எதற்கு என் அக்கா மகன்களை மிரட்டுகிறீர்கள் என்று கேட்டுள்ளார். அதற்கு எதிரிகள் இருவரும் சேர்ந்து என் மாமாவை அடித்து விட்டதாக என் அத்தை போன் செய்த தகவல் சொன்னார். நானும் என் அண்ணன் பிரதீப் குமாரும் அந்த இடத்திற்கு சென்று சண்டையை விலக்கி விட்டு என் மாமாவை அழைத்துக் கொண்டு திருப்பி வந்த பொழுது சதீஷ்குமார் இரும்பு கம்பியை எடுத்து வந்து என் இடது காதில் அருகே அடித்துவிட்டார். அதில் எனக்கு இடது காது மற்றும் இடது தாடையில் காயம் ஏற்பட்டது. அதில் நான் மயக்கமடைந்து கீழே விழுந்து விட்டேன். தனியார் ஆம்புலன்ஸ் மூலம் என்னை அன்னூர் எஸ் எம் எப் மருத்துவமனைக்கு அழைத்து போய் சிகிச்சை சேர்த்தார்கள்.மூன்று நாட்கள் நான் அங்கு உள்நோயாளியாக சிகிச்சை எடுத்துக் கொண்டேன். சதீஷ்குமார் என்னை அடிக்க பயன்படுத்திய இரும்பு கம்பியை பார்த்தால் என்னால் அடையாளம் சொல்ல

முடியும். அது என்னிடம் தற்போது காட்டப் படுவதுதான். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் தேதிக்கு எத்தனை நாட்களுக்கு முன்னர் என் மாமா சதீஷ்குமார் இடம் பணம் வாங்கி இருந்தார் என்றால் எனக்கு அது தெரியாது. சதீஷ்குமார் என் மாமாவை கொல்லாமல் விடமாட்டேன் என்று மிரட்டியதாக சொல்லி உள்ளேன் மேற் சொன்ன சங்கதியை போலீசார் விசாரணையில் சொல்லி உள்ளேனா என்றால் சொல்லி உள்ளேன். நான் மருத்துவமனைக்கு சென்ற போது எத்தனை மணி இருக்கும் என்றால் 8:30– 9.00 மணி என்று சொன்னார்கள் ஆனால் நான் மயக்க நிலையில் இருந்தேன். நான் மருத்துவமனையில் அனுமதித்த சமயத்தில் நான் மருத்துவரிடம் எதுவும் சொல்லவில்லை என்றால் சரிதான். என் அத்தை எனக்கு போன் செய்தார்களா அல்லது பிரதீப் குமாருக்கு போன் செய்தார்களா என்றால் இருவருக்கும் போன் செய்தார்கள். அவர்கள் எனக்கு போன் செய்த போது நான் அரை கிலோ மீட்டர் தூரத்தில் இருந்தேன். என் அத்தை எனக்கு போன் செய்த போது எத்தனை மணி இருக்கும் என்றால் ஏழு முப்பது மணி இருக்கும். நடந்ததாக சொல்லப்படும் சம்பவ இடத்திற்கு நான் சென்ற சமயத்தில் பிரதீப் குமார் அங்கு இருந்தாரா என்றால் இருந்தார். நான் சொல்வது போல் இந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றும் நான் என் மாமாவுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணைஇல்லை:**

| | |
|---|---|
| சாட்சியின் கையொப்பம் | திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.<br><br>(Sd.) N.Keerthana<br>குற்றவியல் நீதித்துறை நடுவர், அவிநாசி. |